பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 02 2026 TUESDAY   12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு, புதுமை படைப்பு, இளைஞர்களுக்கான எதிர்காலம் உள்ளிட்டவற்றை ஒருங்கிணைப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- நாட்டின் சுகாதாரத்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.
- 2026-27ஆம் நிதியாண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தமிழக சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.
- பங்களாதேஷ் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.
- வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா ஏ அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் நேபாளத்தை வென்றது.

>>>>><<<<<

புதுதில்லியில் நடைபெறும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சி மாநாடு, புதுமை படைப்பு, இளைஞர்களுக்கான எதிர்காலம் உள்ளிட்டவற்றை ஒருங்கிணைப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த மாநாட்டில் மக்கள் தெளிவாக அறிந்து கொள்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான அனைத்து விவரங்களையும், திறமைகளையும் மனித மேம்பாட்டிற்காக பயன்படுத்த வேண்டும் என்பதில் மத்திய அரசு முழுக்கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

வரும் 20ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த உச்சி மாநாட்டில், 300 கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

>>>>><<<<<

பிரான்ஸ் அதிபர் திரு. Emmanuel Macron-ன் பயணம், இந்தியா - பிரான்ஸ் இடையேயான நல்லுறவு நடவடிக்கைகளுக்கு மேலும் வலுவூட்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள பிரான்ஸ் அதிபரை பிரதமர் இன்று மும்பையில் சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மாநாட்டில் பிரான்ஸ் அதிபர் திரு. Emmanuel Macron பங்கேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

நாட்டின் சுகாதாரத்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், சுகாதாரத்துறையில் இந்த தொழில்நுட்பத்தை மேலும் அதிகரிக்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதாக அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் வகையில், சுகாதாரத்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதாக திருமதி. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான், பாரத் விஸ்தார் எனப்படும் விவசாயிகளுக்கான டிஜிட்டல் செயலியை இன்று தொடங்கி வைத்தார்.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதனை தொடங்கி வைத்துப் பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் செயல்படும் இந்த செயலி மூலம், மண்வளம், வானிலை, வேளாண் பொருட்கள் சந்தை நிலவரம் உள்ளிட்டவை குறித்த தகவல்களை விவசாயிகள் எளிதாக பெற முடியும் என்று தெரிவித்தார்.

முதல்கட்டமாக இந்த சேவை தொலைபேசி வாயிலாகவும், இரண்டாம் கட்டத்தில் மொபைல் செயலி மூலமாகவும் வழப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

பீகார் முன்னாள் முதலமைச்சர் Karpoori Thakur-ரின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் மரியாதை செலுத்தியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், சமூகநீதியின் பாதுகாவலராக Karpoori Thakur திகழ்ந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகம், சமத்தும் மற்றும் சுதந்திரத்திற்கு Karpoori Thakur தமது வாழ்க்கையை அர்ப்பணித்ததாக திரு. அமித் ஷா புகழாரம் சூட்டியுள்ளார்.

>>>>><<<<<

ஒடிசா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர், ஆளுநர் திரு. ஹரிபாபு உரையுடன் இன்று தொடங்கியது.

முதலமைச்சரும், அம்மாநில நிதியமைச்சருமான திரு. மோகன் சரண் மாஜி, வரும் நிதியாண்டிற்கான பொது பட்ஜெட்டை இன்று தாக்கல் செய்கிறார்.

இந்த பட்ஜெட் கூட்டத் தொடர், ஏப்ரல் மாதம் 8ஆம் தேதிவரை இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

2026-27 ஆம் நிதியாண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தமிழக சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

மாநிலத்தில் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறித்த அறிவிப்புகளை அமைச்சர் பேரவையில் இன்று வெளியிட்டார்.

*சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களுக்கு 5 ஆயிரத்து 463 கோடி ரூபாயும்,*

*பள்ளிக் கல்வித்துறைக்கு 48 ஆயிரத்து 534 கோடி ரூபாயும்,*

*உயர் கல்வித்துறைக்கு 8 ஆயிரத்து 505 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.*

*மாநிலத்தில் 3 ஆயிரத்து 632 மாற்றுத் திறனாளிகள் உள்ளாட்சி அமைப்புகளில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அரசு வேலைவாய்ப்புகளில் அவர்களுக்கு 4 சதவீத ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு செயலாக்கத் திட்டங்களுக்கு 17 ஆயிரத்து 88 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*ஊரக வளர்ச்சித்துறைக்கு 28 ஆயிரத்து 687 கோடி ரூபாயும்,*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு 718 கோடி ரூபாயும்,*

*நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 27 ஆயிரத்து 327 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.*

*40 ஆண்டுகளுக்கு மேலான பழமைவாய்ந்த கூட்டுக் குடிநீர் திட்டங்களை சீரமைப்பதற்கு 809 கோடி ரூபாயும்,*

*நீர்நிலைகளில் கரைகளை மேம்படுத்துவதற்கு 374 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.*

*தொழிலாளர் நலத்துறைக்கு ஆயிரத்து 996 கோடி ரூபாயும்,*

*மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு 22 ஆயிரத்து 90 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்த நிதியமைச்சர், நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள் குறித்து பட்டியலிட்டார்.*

*விடியல் பயணத்தின் மூலம், 851 கோடி முறை பெண்கள் பயணம் செய்திருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.*

அயலக தமிழர்களுக்கு தமிழ் மொழியை கற்றுக்கொடுக்க 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர், மகளிரை தொழில் முனைவோராக்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

தமிழக அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பான பிரசவத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாக கூறிய அவர் நாட்டிலேயே தமிழகம் தான் முதலிடம் வகிப்பதாக தெரிவித்தார்.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதை சுட்டிக்காட்டிய அவர், 41 சதவீதம் பெண்கள் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருவதாக அவர் கூறினார்.

பணிபுரியும் பெண்களுக்கு 19 இடங்களில் பாதுகாப்பான தோழி விடுதிகள் திறக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

6 லட்சம் சுயஉதவி குழுக்களுக்கு ஒரு கோடியே, 40 லட்சம் கோடி வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

தமிழகத்தில் 25 இடங்களில் மூத்த குடிமக்களுக்கான அன்புச்சோலை இல்லம் தொடங்கப்பட்டிருப்பதாக திரு. தங்கம் கூறினார்.

>>>>><<<<<

நாகை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக கல்லூரியில் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது.

விவசாயப் பணிகளை மேற்கொள்ளும் பெண்களுக்கு, விவசாயப் பணி இல்லாத நேரங்களில் காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படுவதாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக முதல்வர் திரு. ரவி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ரவி 42 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

பங்களாதேஷ் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

பங்களாதேஷ் தலைமை தேர்தல் ஆணையர் திரு. Nasirudin அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

>>>>><<<<<

வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா ஏ அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் நேபாளத்தை வென்றது.

பாங்காக்கில் இன்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வேன்ற இந்தியா ஏ அணி முதலில் பந்துவீச தீர்மானித்ததை அடுத்து பேட் செய்த நேபாளம் 18 ஓவரில் 78 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனையடுத்து 79 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்த இந்தியா ஏ அணி ஏழு புள்ளி ஐந்து ஓவரிலேயே மூன்று விக்கெட் இழப்பிற்கு 82 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

தினேஷ் பிருந்தா அதிகபட்சமாக 39 ரன் எடுத்தார்.

>>>>><<<<<